ஒரு ஃப்ளோர் பிரைஸ் போட்ட காரணத்தால் தங்களைப் பாதிக் கிறது என்றார்கள். பிறகு மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசும் காம்ப்ரமைஸ் ஃபார்முலா முறையில் முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

Sheriff of Madras

* 227 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the grounds on which the selection is made for the post of Sheriff of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 'மாநகரின் முதல் குடிமகன்' என்று அழைக்கப்படக்கூடிய தகுதி பெற்றவரும், நல்ல பதவியிலும், நிலைமையிலும் உள்ளவருமான ஒருவரை "ஷெரிப்" ஆக நியமிக்கத் தேர்ந்தெடுப்பதே இதுவரையிலும் நடைமுறையில் இருந்து வருகிற ஒரு மரபு ஆகும். அரசுப் பணியில் உள்ளவர்கள், ராணுவப் பணியில் உள்ளவர்கள், வழக்குரைஞர் தொழில் புரிபவர் ஆகியோர் நியமனத்திற்காகக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. தனியார் நிறுவனங் களில் பணியாற்றி ஊதியம் பெறுபவர்கள் நியமனத்திற்காகக் கருதி பார்க்கப்படுகின்றனர். மகளிரும், ஷெரிபாக நியமிக்கத் தகுதி பெற்றவராவர். இந்தப் பதவி கௌரவப் பதவியாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஷெரிப் பதவி அலங்காரப் பதவி, ஆங்கிலேயரின் அடிமைச் சாசனத்தை நினைவுறுத்தும் பதவி, தேவையில்லாத ஒன்று என்று இன்று ஆளும் கட்சியில் இருப்பவர் கள் அன்று எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் கூறினார்களே, அப்படிப்பட்ட அந்தப் பதவி தேவை என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கண்டனக் குரலைப்பற்றித் தெரியாது. ஷெரிப் பதவி நம்முடைய உயர்நீதி மன்றத்தில் "Letters Patent Appeal" என்ற வகையில் இடம் பெற்றிருக்கிறது. "Letters Patent" அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற்றிருக்கிறது. இதற்கு தனியாக விதிமுறைகள் கிடையாது. கன்வென்ஷனாகத்தான் வைத்திருக்கிறோம். அந்தக் காலத்தில் இருந்த அத்தனையையும் எடுத்து விடுவது என்று முடிவு செய்ய முடியாது. அது எடுப்பது தேவை என்று இந்த அரசாங்கம் கருதினால் அப்போது அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

Water from Red Hills lake

* 178 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any complaints have been received to the effect that water from the Red Hills lake, solely intended for the City's drinking water purposes had been illegally let out for irrigation for five or six days in January, 1969; and

(*b*) if so, the action taken thereon and the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செய்தித் தாள்களில் இந்தச் செய்தியைக் கண்டதும், புழலேரிக்கு உரிய நான்கு மதகுகளையும் நிர்வாகப் பொறியாளரும்,

1970 செப்டம்பர் 3]

உதவிப் பொறியாளரும் பார்வையிட்டனர். 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே மதகுகள் அனைத்தும் சிமிட்டியினால் காரை பூசப்பட்டு மூடப்பட்டிருப்பதால் எந்த மதகின் வாயிலாகவும் தண்ணீர் வெளியேற இயலாது. விரிவான பரிசிலனைக்குப் பின்னர் ஏரி நீர் வெளியேற்றப்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று பொதுப்பணித்துறை அலுவலர்கள் அறுதியிட்டனர்.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that the former Chief Minister made representations and also gave a press statement that he had received a complaint from a responsible farmer that water from the Red Hills lake solely intended for the City's drinking water purposes had been illegally let out for irrigation for five or six days in January 1969 ? Also, whether after the statement of the former Chief Minister, the matter was thoroughly investigated and whether the Government are satisfied that there is no basis for the complaint made in that regard?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It is a fact that the former Chief Minister, Thiru Bhaktavatsalam, made that statement. But on investigation, it was found that the complaint was baseless.

சாலைப் போக்குவரத்து வாரியம்

* 179. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு அரசுக்கு சாலைப் போக்குவரத்து வாரியம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : நம்முடைய மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு 350 மைல்களைத்தான் அரசாங்க ரோடாக ஏற்றுக்கொள்ளுகிறது. அப்படி எடுத்துக்கொள்ளும் நிலையில் எல்லா ரோடுகளையும் எடுத்து போடுவதில் நீண்ட காலம் ஆகும். ஆகவே, இதற்குத் தனிக் கார்ப்பரேஷனை ஏற்படுத்தி எல்லா ரோடுகளையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி சாலைப் போக்குவரத்துக்கு வாரியம் அமைப்பது குறித்து அரசுக்கு உத்தேசம் உண்டா என்பது. உத்தேசம் இல்லை என்று சொன்னேன். 350 மைல்களுக்கு அதிக மாகவும் அரசு சாலைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

டில்லி—கன்னியாகுமரி தேசீய நெடுஞ்சாலை

*180. வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டில்லியையும்—கன்னியாகுமரியையும் இணைக்கும் தேசீய நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் மத்திய அரசின் பரிசிலனையில் இருக்கிறதா?